சட்டப் பேரவைத் தேர்தலில் வெற்றி பெற அர்ப்பணிப்புடன் பணியாற்ற வேண்டும்

அதிமுக நிர்வாகிகளுக்கு முதல்வர் அறிவுரை

சேலம், அக். 18: சட்டப் பேரவைத் தேர்தலில் வெற்றி பெற அதிமுக நிர்வாகிகள் அர்ப்பணிப்புடன் பணியாற்ற வேண்டும் என்று முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி தெரிவித்தார்.

தனது தாயார் கே.தவுசாயம்மாள் மறைவை முன்னிட்டு, எடப்பாடி அருகேயுள்ள சிலுவம்பாளையம் கிராமத்தில் முகாமிட்டிருந்த முதல்வர் எடப்பாடி பழனிசாமி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் சேலம் நெடுஞ்சாலை நகரில் உள்ள வீட்டுக்குத் திரும்பினார்.

பின்னர் முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி சேலம் மாநகர், புறநகர் மாவட்ட அதிமுக நிர்வாகிகளுடன் ஆலோசனை மேற்கொண்டார்.

அப்போது 2021-ஆம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலை எதிர்கொள்வது குறித்தும், தேர்தலில் வெற்றி பெற அனைவரும் அர்ப்பணிப்புடன் பணியாற்ற வேண்டும் எனவும் அவர் ஆலோசனைகளை வழங்கினார்.

இதில் சேலம் மாநகர் மாவட்டச் செயலாளர் ஜி.வெங்கடாசலம், எம்எல்ஏக்கள் செ.செம்மலை, ஏ.பி.சக்திவேல், மனோன்மணி, தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கித் தலைவர் ஆர்.இளங்கோவன், ஒன்றியச் செயலாளர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இதையடுத்து, முதல்வர் சென்னை புறப்பட்டுச் சென்றார்.

பொதுமக்கள் கைத்தறி ரகங்கள

நாகப்பட்டினம், அக். 18: நெசவாளர்களின் வாழ்க்கை மேம்பட பொதுமக்கள் கைத்தறி ரகங்களை அதிகளவில் வாங்க முன்வர வேண்டும் என தமிழக கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஓ. எஸ். மணியன் கேட்டுக் கொண்டுள்ளார்.

நாகை கோ-ஆப் டெக்ஸ் விற்பனை நிலையத்தில் தீபாவளி விற்பனை தொடக்க விழா ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. நிகழ்ச்சியில் அமைச்சர் ஓ.எஸ். மணியன் குத்துவிளக்கேற்றி விற்பனையைத் தொடங்கி வைத்தார். பின்னர் அவர் கூறியது:

கைத்தறி நெசவாளர்களின் தாய் சங்கமான கோ-ஆப் டெக்ஸ் இந்தியா முழுவதும் 155 விற்பனை நிலையங்களுடன் செயல்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு ரூ. 240 கோடி விற்பனை இலக்காக நிர்ணயிக்கப்பட்டு, ரூ. 218 கோடி

அமைச்

நாகை கோ-ஆப் டெக்ஸ் கிளையில் தீபாவளி விற்
மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஓ. எஸ். மணிய
தொகுதி உறுப்பினர் எம். செல்வர

தற்கொலை முடிவு வேண்டாம்: ஒருங்கிணைந்த சிகிச்சை முறைகளால் 10 நாள்களில் 51 ஆயிரம் பேர் குணம்

சென்னை, அக். 18: கரோனா நோயாளிகளுக்கு ஒருங்கிணைந்த சிகிச்சைகளை அளித்ததன் பயனாக தமிழகத்தில் கடந்த 10 நாள்களில் மட்டும் 51 ஆயிரம் பேர் நோய்த் தொற்றிலிருந்து குணமடைந்திருப்பதாக சுகாதாரத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மாநிலத்தில் இதுவரை 6.87 லட்சம் பேருக்கு கரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அலோபதி சிகிச்சையுடன் சேர்த்து சித்தா மற்றும் யோகா - இயற்கை மருத்துவ சிகிச்சைகளும் அளிக்கப்பட்டு வருகின்றன. அனைத்து இடங்களிலும் நோயாளிகளுக்கு பாரம்பரிய மருத்துவ முறையிலும், அலோபதி முறையிலும் ஒருங்கிணைந்த சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன.

குறிப்பாக, கபசுரக் குடிநீர், நிலவம்பு கசாயம், மூலிகை தேநீர், தூதுவளை ரசம், கற்பூரவல்லி ரசம், ஆடாதொடை ரசம், மணத்தக்காளி ரசம், மூலிகை உணவுகள், நவதானிய பயர்கள் உள்ளிட்டவை நோயாளிகளுக்கு வழங்கப்படுகின்றன. அதனுடன் பிரணாயாமப் பயிற்சிகள், யோகா பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன. மேலும், நீராவி பிடித்தல், சுவாசத்துக்கான அரோமா தெரபி போன்ற சிகிச்சைகளால் நல்ல பலனை அளித்துள்ளதாகத் தெரிகிறது.

உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க வழி வகுக்கும். சித்த மருத்துவ கசாயங்களும், மருந்துகளும் வழங்கப்படும்போது காய்ச்சல், சளி, வாந்தி, பேதி போன்ற பாதிப்புகளில் இருந்து விரைந்து குணமாகலாம். இத்தகைய ஒருங்கிணைந்த சிகிச்சை முறைகள் நல்ல பலன்களை அளிக்கின்றன.

அதன் பயனாக 7 முதல் 10 நாள்களுக்குள் பெரும்பாலான கரோனா நோயாளிகள் குணமடைவதைக் காண முடிகிறது. மாநிலத்தில் இதுவரை 6.37 லட்சத்துக்கும் அதிகமானோர் கரோனாவிலிருந்து குணமடைந்து வீடு திரும்பியதற்கும் அதுவே காரணம்.

பி.இ. இறுதிப் பருவக் கேர்வு: ஏ

விற்பனை அறிவிப்பு

ஹால்மார்க் லிவிங் ஸ்பேஸ் பிரைவேட் லிமிடெட் (கலைப்பில் உள்ளது)

CIN: U45400TN2012PTC084362

பதிவு அலுவலகம் : அறை - ஏ. எண்.43, பழைய எண்.62/2, யுனைட்டட் பிளாசா, உஸ்மான் சாலை, தி.நகர், சென்னை - 600 017.

மனை : 'எமரால்டு', செட்டியுண்ணியம், விளக்கடி சாலை, மஹிந்திரா வேர்ல்டு சிட்டி எதிரில் (ஆர்டிஓ அலுவலகம் அருகில்)

நொடித்தல் மற்றும் திவால் சட்டத் தொகுப்பு 2016-ன் கீழ் மின்னணு ஏலம்

IBBI கட்டுப்பாடுகள் 2016, (கலைத்தல் நடைமுறை) விதி 32-ன் கீழ் மெசர்ஸ் ஹால்மார்க் லிவிங் ஸ்பேஸ் பிரைவேட் லிமிடெட்டிற்கு (கலைப்பில் உள்ளது) சொந்தமான கீழ்க்கண்ட சொத்துக்களை விற்பனை செய்ய கலைப்பலுவலர் நியமித்து மாண்புமிகு தேசிய கம்பெனிகள் சட்ட தீர்ப்பாயம் (என்சிஎல்டி), சென்னை பெஞ்ச், 17.08.2018 அன்று தேதியிட்ட ஆணையில் உத்தரவிட்டுள்ளது.

விருப்பமுள்ள விண்ணப்பதாரர்கள், கம்பெனியின் இணையதளம் http:// www.hallmarklivingspace.co.in/-ல் முழுமையான மின்னணு ஏல செயல்முறை தகவல் ஆவணத்தில் உள்ள ஆன்லைன் மின்னணு ஏலம் தொடர்பான விதிமுறை விவரங்கள், மின்னணு ஏல படிவம், தகுதி வரம்பு, ஏலதாரர்களின் அறிவிப்பு உள்ளிட்டவற்றை பார்த்து, அதற்குட்படுதல் வேண்டும். மின்னணு ஏல விற்பனை http://ncltauction.auctiontiger.net இணையதளம் மூலம் கூறப்பட்ட மின்னணு ஏல செயல்முறை ஆவணத்திற்கு உட்பட்டு "எது எங்கு அல்லது எப்படி உள்ளதோ, அதை அப்படியே" என்ற முறையில் ஏல விற்பனை நடத்தப்படும். பொருந்தக்கூடிய ஜிஎஸ்டி மற்றும் பிற வரிகள் கூடுதலாக செலுத்த வேண்டும்.

சொத்து	பார்வையிடும் நாள்	மின்னணு ஏலத் தேதி மற்றும் நேரம்	ரிசர்வ் விலை (இந்திய ரூபாயில்)	டேவணித் தொகை & கடைசி தேதி	ஏல அதிகரிப்பு தொகை
எமரால்டு மனையில் உள்ள நிலம் (7.62 ஏக்கர்) மற்றும் முடிக்கப்படாத கட்டிடம் (8,98,137 சதுர அடி)	21/10/2020 முதல் 16/11/2020 வரை காலை 11.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை	18/11/2020 மாலை 3.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை	ரூ.110.00 கோடி	ரூ.11.00 கோடி கடைசி தேதி: 16/11/2020	ரூ.50.00 லட்சம்

மின்னணு ஏலம் தொடர்பான விவரங்களை அறிந்து கொள்ள திரு. பிரவீன் தேவர், +91-9722778828, மின்னஞ்சல்: Praveen.thevar@auctiontiger.net அல்லது திரு. பிரபாகரன் +91-7010067800 மின்னஞ்சல்: tamilnadu@auctiontiger.net-ல் ஆகியோரை தொடர்பு கொள்ளலாம். விற்பனை தொடர்பான மேலும் விவரங்களை அறிந்து கொள்ள கீழ்க்கையொப்பமிட்டவரை தொடர்பு கொள்ளலாம் அல்லது csdhanapal.ibc@gmail.com என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பலாம்.

S. தனபால்
ஹால்மார்க் லிவிங் ஸ்பேஸ் பிரைவேட் லிமிடெட்டிற்கான (கலைப்பில் உள்ள) கலைப்பலுவலர்
Reg No- IBBI/IPA-002/IP-N00060/2017- 18/10112
அறை எண். 103, முதல் மாடி, காவேரி காம்ப்ளக்ஸ்,
96/104, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை (நபார்டு & ஐசிஐசிஐ வங்கி அருகில்)
நுங்கம்பாக்கம், சென்னை - 600 034. தொலைபேசி : 044 - 4553 0256/0257
மொபைல் : 09677022712, மின்னஞ்சல் : csdhanapal.ibc@gmail.com

தேதி : 19.10.2020
இடம் : சென்னை